**இலங்கை கணக்கீட்டுத் தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் II பரீட்சை – 2022 யூலை

## (201) உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும்

## பகுதி - A

**வினா எண் 01**

இது 25 புள்ளிகளையுடைய ஓர் கட்டாய வினாவாகும். இவ்வினாவில் உயர் நிதிக் கணக்கீடும் கிரயவியலும் பாடவிதானத்தில் உள்ள அறிவு பரீட்சிக்கப்படுகிறது. பெரும்பாலான தேர்வுநாடிகள் முழுமையான புள்ளிகளைப் பெற்றதோடு பலர் இவ்வினாவில் கணிசமான புள்ளிகளைப் பெற்றுள்ளனர்.

விடைகளிலிருந்து அவதானிக்கப்பட்ட பொதுவான பலவீனங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

1.1. இவ்வினா சொத்தொன்றின் கீழ்க் கொண்டு செல்லும் பெறுமதி தொடர்பானதாகும். பெரும்பாலானோர் சரியாக விடை எழுதிய போதிலும் சிலர் சரியாக கீழ்க் கொண்டு செல்லும் பெறுமதியை பெறுமானத் தேய்வுக்கு பின் கணிக்க தவறியுள்ளனர்.

1.2. இவ்வினா இலங்கை கணக்கீட்டு நியமம் 2 இருப்புகள் தொடர்பானதாகும். பெரும்பாலானோர் இதற்கு சரியாக விடை அளித்துள்ளனர்.

1.3. இவ்வினா மாணவர்களின் பெறுமானம் அளிக்கத்தக்க பெறுமதி தொடர்பான அறிவு தொடர்பானதாகும். கணிசமான மாணவர்கள் இதற்கு சரியாக விடை அளித்த போதிலும் சிலர் பெறுமானத் தேய்வை பெருமானம் அளிக்கத்தக்க பெறுமதிக்கு பதிலாக விடையாக வழங்கியுள்ளனர்.

1.4. இவ்வினா கிரயக் கணக்கீட்டின் இலக்குகள் தொடர்பானதாகும். கணிசமான மாணவர்கள் சரியான விடைகளை அளித்த போது சிலர் பிழையாக விடை அளித்துள்ளனர்.

1.5. இவ்வினா மூலப்பொருள் யு இன் மீள்கட்டளை மட்டம் தொடர்பானதாகும். பெரும்பாலானோர் சரியாக விடை அளித்துள்ளனர்.

1.6. இவ்வினா 1890 ஆம் ஆண்டு பங்குடமை கட்டளைச் சட்டத்தின் கீழ் பங்காளர்களின் உரிமைகளான கடன் வட்டி பங்குடமை ஒப்பந்தம் சம்பளம் ஏனையவை தொடர்பானதாகும். பெரும்பாலானோர் சரியாக விடை அளித்துள்ளனர்.

1.7. இவ்வினா வழங்கப்பட்ட சிறு விபரணத்தைக் கொண்டு நிதிக் கணக்கீட்டையும் கிரயக் கணக்கீட்டையும் வேறுபடுத்தச் சொல்லிக் கோருகிறது. பெரும்பாலானோ சரியாக விடை அளிக்கவில்லை.

1.8. இவ்வினாவில் பங்குடமை ஒப்பந்தத்தில் காணப்படும் மூன்று விடயங்கள் கேட்கப்பட்டிருந்தன. பெரும்பாலானோர் 1890 பங்குடமை கட்டளைச் சட்டத்தின் 24 ஆம் பிரிவின் படி தரப்பட்டுள்ள விடயங்களை சரியாக எழுதியிருந்தனர்.

1.9. இவ்வினாவில் பெறுமதி சேர் வரி கொடுப்பனவை கணிப்பிட கோரப்பட்டிருந்தது. தேர்வுநாடிகளின் பெறுமதி சேர் வரி தொடர்பான அறிவு திருத்திகரமாக இருந்த போதிலும் கணித அறிவில் முன்னேற்றம் தேவை.

1.10. இது ஒரு வேலையின் விலைக் கணிப்பு தொடர்பானதாகும். சிலர் கிரயத்தில் 20% இலாபத்தையும் வேறு சிலர் மேந்தலைக் கிராமத்தில் 75% ஐயும் கணிக்க தவறியுள்ளனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமாக உள்ளது.**

**வினா எண் 02**

இவ்வினாவில் நிறைவில் நிதித் தரவுகள் தரப்பட்டு தனியுடைமைக்கான பரீட்சை மீதியை தயாரிக்க கேட்கப்பட்டு இருந்தனர். பெரும்பாலானோர் இதற்கு சரியாக விடை அளித்திருந்தனர். சிலர் சரியான கருத்தியல் (theoretical) அறிவின்மையால் சரியாக விடை அளிக்க தவறியிருந்தனர்.

சிலர் தொடக்க மூலதனத்தை கணிக்க தவறியிருந்தனர். மேலும் வேறு சிலர் பரீட்சை மீதிக்குப் பதில் நிதிநிலைக் கூற்றையும் வருமானக் கூற்றை தயாரித்திருந்தனர். சிலர் தேய்வைக் கருத்தில் கொள்ளவில்லை. முன் செலுத்தப்பட்ட வாடகை பரீட்சை மீதியல் சிலரால் காட்டப்படவில்லை. சில மாணவர்கள் உரிமையாளரின் பணத்தில் வாங்கப்பட்ட நிறுவன சொத்தை எடுப்பனவு எனக்காட்டி உள்ளனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமாக இல்லை.**

**வினா எண் 03**

இவ்வினா பங்குடமையின் அடிப்படை அறிவை பரிட்சிக்கிறது. இங்கு மூலதனக் கணக்கும் நடைமுறைக் கணக்கும் கேட்கப்பட்டிருந்தது. பங்குடமையில் போதிய அடிப்படை அறிவின்மை அவதானிக்கப்பட்டது. மாணவர்களுக்கு மூலதனக் கணக்கு மற்றும் நடைமுறைக் கணக்குக்கான பதிவுகள் தொடர்பில் போதிய புரிதல் காணப்படவில்லை.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ் வருமாறு

- மூலதனக் கணக்குக்கு பதிலாக நடைமுறைக் கணக்கில் நன்மதிப்பும் மீள்மதிப்பீட்டு ஒதுக்கவும் சீராக்கப்பட்டு இருந்தன.
- சிலரே மூலதன வட்டியை கணித்திருந்தனர்.
- ஓய்வு பெறும் பங்காளருக்கு வழங்கப்பட வேண்டியவை சரியாக கணிப்பிடப்பட்டு மூலதனக் கணக்கில் காட்டப்படவில்லை.
- சிலரால் எடுப்பனவுகள் மூலதனக் கணக்கில் காட்டப்பட்டிருந்தன.
- சிலரால் நடைமுறைக் கணக்கு மீதிகள் மூலதனக் கணக்குக்கு மாற்றப்பட்டிருந்தன.
- சில தேர்வுநாடிகள் மூலதன வட்டியை மூலதனக் கணக்கில் இட்டிருந்தனர்.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமாக உள்ளது.**

**வினா எண் 04**

இவ்வினா இலாப நோக்கற்ற நிறுவனம் ஒன்றின் வருமானச் செலவுக் கணக்கு மற்றும் சந்தாக் கணக்கு தொடர்பான அறிவை பரீட்சிக்கிறது.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ் வருமாறு

1. சிலர் சந்தாக் கணக்கு சரியாக செய்த போதிலும் சிலர் இவ்வினாவை முயற்சிக்கவில்லை. வேறு சிலர் ஊடுசெயல்களை பிழையான பக்கங்களில் பதிந்திருந்தனர்.

2. சந்தாக் கணக்கு சரியாக தயாரிக்கப்படவில்லை. மேலும் வரவு செலவு பதிவுகள் சரியாக இனங்காணப்படவில்லை.

3. சிலர் பதிவழிக்கப்பட்ட சந்தாவை சந்தாக் கணக்கில் கழிக்கவில்லை. மேலும் வேறு சிலர் சந்தா வருமானத்தை வருமானச் செலவுக் கணக்கில் காட்டவில்லை.

4. சிலர் சந்தாக் கணக்கின் தொடக்க, இறுதி மீதிகளை எப்பக்கத்தில் பதிவது என்பது தொடர்பில் போதிய அறிவைக் கொண்டிருக்கவில்லை. மேலும் வேறு சிலர் அங்கத்துவக் கட்டணத்தை எவ்வாறு கணிப்பது என்ற அறிவைக் கொண்டிருக்கவில்லை.

5. சிலர் தேய்வு மடிக்கணினி தொடர்பானது என்பதை அறிந்திருக்கவில்லை. அதனால் அப் பெறுமதியை வருமானச் செலவுக் கணக்கில் காட்டவில்லை.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை திருப்திகரமாக உள்ளது.**

**வினா எண் 05**

**பகுதி (A)**

இவ்வினா உற்பத்திக்கிரய நிலையம் மற்றும் சேவை நிலையம் தொடர்பான அறிவை பரீட்சிக்கிறது. பெரும்பாலான மாணவர்கள் இவ்வினாவுக்கு சரியாக விடையளித்தனர்.

**பகுதி (B)**

இவ்வினா மூலப்பொருள் கட்டுப்பாட்டுக் கணக்கு மற்றும் குறைவேலைக் கட்டுப்பாட்டுக் கணக்கு தொடர்பான அறிவை பரீட்சிக்கிறது. பெரும்பாலானோர் இவ்வினாவுக்கு சரியாக விடையளிக்கவில்லை. மேலும் பலர் இவ்வினாவை முயற்சிக்கவில்லை. சிலர் கணக்கை தயாரிப்பதற்குப் பதிலாக கூற்றைத் தயாரித்திருந்தனர். மேலும் சிலர் கணிப்பை மட்டும் காட்டி இருந்தனர். இப்பகுதியில் மாணவர் அறிவு போதுமானதாக இல்லை என்பது அவதானிக்கப்பட்டது

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை சராசரியாக உள்ளது.**

**வினா எண் 06**

**பகுதி (A)**

இவ்வினா ஆண்டுக் கேள்வியையும் சிக்கன கட்டளை கணியத்தையும் பரீட்சிக்கிறது. பலர் ஆண்டுக் கேள்வியை சரியாக கணித்த போதும் சிக்கனக் கட்டளைக் கனியத்தை சரியாகக் கணிக்கவில்லை. சிலர் விடையை கிலோகிராமுக்கு மாற்றாமல் கிராமில் தந்திருந்தனர். மேலும் ஆண்டுக் கேள்வி சரியாக சிக்கனக் கட்டளைக் கணியக் கோவையில் பயன்படுத்தப்படவில்லை என்பதும் அவதானிக்கத்தக்கது.

**பகுதி (B)**

இவ்வினா சம்பளம் மற்றும் ஊக்குவிப்புத் தொகையைக் கொண்ட ஊழியரின் உழைப்பைக் கணிப்பது தொடர்பானதாகும். பலர் சரியான விடையளிக்கத் தவறியிருந்தனர். மேலும் சிலர் ஊக்குவிப்புக்கான அலகுகளின் எண்ணிக்கை சரியாக கணிக்கத் தவறி இருந்தனர். இதனால் மிகுதிக் கணிப்பீடு பிழையாக அமைந்தது.

**இவ்வினாவுக்கான ஒட்டுமொத்த செயலாற்றுகை சராசரியாக உள்ளது.**

## பகுதி (C)

**வினா எண் 07**

இவ்வினா சொந்தக் கம்பெனி ஒன்றின் நிதி கூற்றுகள் தயாரிப்பது தொடர்பானதாகும். இவ்வினா **பிரிவு (A)** மற்றும் **பிரிவு (B)** ஐக் கொண்டது. **பிரிவு (A)** முற்றடக்க வருமான கூற்றையும் **பிரிவு (B)** நிதிநிலைக் கூற்றையும் தயாரிப்பதைப் பரிட்சிக்கிறது.

பெரும்பாலானோர் இவ்வினாவுக்கு விடை அளிக்க முயற்சித்த போதும் சிலரே முழுமையான புள்ளிகளைப் பெற்றனர்.

அவதானிக்கப்பட்ட பொதுவான தவறுகள் கீழ் வருமாறு

**(a) முற்றடக்க வருமானக் கூற்றுத் தயாரிப்பு**

1. இறுதி இருப்பு செம்மையாக்கள் சரியாக செய்யப்படவில்லை. இருப்பு இழப்புக்கான புதிய கணக்கிட்டு நியமத்தை பின்பற்றவில்லை.
2. வருமான வரி செம்மையாக்கள் பெரும்பான்மையானோர் செய்கையில் காட்டப்படவில்லை. மேலும் பலர் வருமான வரியை சரியாக கணிக்கவில்லை.
3. பலர் தொகுதிக்கடன் வட்டியை சரியாகக் கணிக்கவில்லை. அவர்கள் செலுத்தப்பட்ட வட்டியை மட்டும் கருத்தில் கொண்டதோடு ஆண்டுக்கான மொத்த வட்டியை கணிக்க தவறி உள்ளனர்.
4. அறவிட முடியாக் கடனான ரூபா 17,970 பலரால் வருமானக்கூற்றுத் தயாரிப்பில் கருத்தில் கொள்ளப்படவில்லை. அறவிட முடியாக் கடனுக்கான குறை ஒதுக்கு சரியாக கணிக்கப்படவில்லை.
5. அட்டுருக்கள் சிலரால் சரியாக நிதிக் கூற்றுக்களை காட்டப்படவில்லை.
6. சிலர் செய்கைகளைச் சரியாகக் காட்டாததால் புள்ளிகளை இழந்தனர்.
7. பலர் பெறுமானத் தேய்வை சரியாகக் கணிக்கவில்லை.
8. நிர்வாக செலவு மற்றும் விநியோகச் செலவுக்கான விரிவான செய்கைகள் பல மாணவர்களால் காட்டப்படவில்லை எனவே அவர்கள் புள்ளிகளை இழந்தனர்.
9. சில மாணவர்கள் சில தொகைகளை ஆயிரத்துக்கு மட்டம் தட்டிய போது சில தொகைகளை அவ்வாறு மட்டம் தட்ட தவறினார்.
10. பல மாணவர்கள் தேறிய இலாபக் கணிப்பில் சில புள்ளிகளை இழந்தனர். ஏனெனில் பலர் இக்கணிப்பீட்டில் ஏதேனும் ஒரு தவறை இழைத்திருந்தனர்.

**(b) நிதி நிலைக் கூற்றுத் தயாரிப்பு**

1. தொகுதிக் கடன் வட்டி நிலுவை மின்சாரக் கட்டண நிலுவை மற்றும் வருமான வரி ஏற்பாடு போன்றன சரியாகக் காட்டப்படவில்லை.
2. சிலர் திரண்ட தேய்வை சரியாகக் காட்டவில்லை.
3. பலர் செலுத்த வேண்டிய வருமான வரியை சரியாக கணிக்கவில்லை.
4. சிலர் பெறுமானத் தேய்வுக் கணிப்பை சரியாக செய்கையில் கணித்த போதிலும் நிதிநிலைக் கூற்றில் அவற்றை சரியான இடத்தில் பதியவில்லை.
5. சிலர் தொகுதிக் கடன் வட்டியை தொகுதிக் கடனுடன் கூட்டி அதை நடைமுறையல்லாப் பொறுப்பில் இட்டுள்ளனர்.
6. பெரும்பாலானோர் இருப்புச் சிதைவுகளை இருப்பிலிருந்து கழிக்க தவறியுள்ளனர்.
7. பெரும்பாலானோர் அறவிட முடியாக் கடனை கடன் பட்டோரிலிருந்து கழிக்கத் தவறியுள்ளனர்.

**பரீட்சையில் செயல்திறனை மேம்படுத்தும் பொருட்டு தேர்வுநாடிகளின் ஆற்றல் மட்டத்தினை அதிகரிப்பதற்கான பரிந்துரைகள்**

1. பாடநூலை நன்றாகப் படித்து அதன் உள்ளடக்கத்தைக் கசடற கற்றல் வேண்டும்.
2. செயல் வினைச் சொற்களின் வரையறைகளை புரிந்து கொண்டு வினாத்தாளின் இறுதியில் தரப்பட்டுள்ள செயல் வினைச்சொல் செவ்வை நிரலை அடிப்படையாகக் கொண்டு விடையளிக்க பழக வேண்டும்.
3. கடந்த கால வினாத்தாள்களின் உள்ளடக்கத்தை படிப்பதோடு குறைந்தது இரண்டு தொடக்கம் மூன்று கடந்த கால வினாத்தாள்களை பயிற்சி செய்து வினாக்கள் அமைக்கப்படும் முறைகள் தொடர்பில் தெளிவுற வேண்டும்.
4. கடந்த கால வினாத்தாள்களை நேரத் திட்டமிடலோடு செய்து பார்த்தல் வேண்டும்.
5. நேர்த்தியான கையெழுத்தில் விடைகளை எழுத வேண்டும்.
6. வினாத்தாளில் வழங்கப்பட்டுள்ள அறிவுறுத்தல்களை விடை எழுத முன் கவனமாக வாசித்தல் வேண்டும்.
7. வினாவை விளங்கிக் கொண்டு பொருத்தமானதும் துல்லியமானதுமான விடைகளை வழங்க மனதை தெளிவாகவும் சமநிலையிலும் வைத்திருத்தல் வேண்டும்.
8. புள்ளிகளை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொரு கேள்விக்கும் ஆன நேர ஒதுக்கீட்டை தீர்மானித்தல்
9. விடைத்தாள்களை கையளிக்கும் முன் எல்லா வினாக்களுக்கும் சரியாக விடையளிக்கப்பட்டுள்ளதா மேலும் இலக்கங்கள் சரியாக இடப்பட்டுள்ளது என இரு முறை பார்த்தல்.